மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஏற்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

மீன் இறங்குதளம்

***42958—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கத்தில் திருமுகம் காட்டாமலேயே முத்திரை பதித்திட்ட தாயே, விழி அசைவில் விஸ்வரூப வெற்றியைப் பெற்றுத் தந்த வெற்றிச் செல்வியே, திரும்பிய திசை யாவும் வெற்றிக் கொடியேற்றி வரும் எங்கள் திருவரங்கத்துத் திருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) இடர்களையும், தடைகளையும் தகர்த்தெறிந்து, இமயம்போல் உயர்ந்து, மீண்டும் அரியாசனம் ஏறும் அரிமா தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) நாளை பிறந்தநாள் காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எங்கள் ஆயுளையும் சேர்த்து, நீண்ட நோயில்லா ஆயுளைக் கொடுக்க இறைவனை வேண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு *உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 11-15

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருவதற்கான பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. எனவே, இதை ஆய்வில் எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கு இருக்கக்கூடிய மீனவர்கள் இந்த மீன் இறங்குதளத்தைப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். அந்தக் கிராமத்தில் அதற்கான தேவை இருக்கிறது. எனவே, அரசு அந்த இடத்தை பரிசிலனை செய்து, ஆய்வு செய்து, நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குளச்சல், தேங்காய்ப்பட்டணம் ஆகிய இடங்களில் நடைபெறும் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தூத்தூர் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என அரசு அறிவித்தும் இதுநாள் வரை அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. மணக்குடி, இராஜாக்கமங்கலம்துறை ஆகிய மீனவ கிராமங்களில் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள மீன்பிடித் துறைமுகப் பணிகளை உடனேயே தொடங்கி நடத்தவும், இராஜாக்கமங்கலம்துறை, பிள்ளைத்தோப்பு, இராமன்துறை, முள்ளூர்துறை, அரையன்தோப்பு, பூத்துறை, சின்னதுறை, இரவிபுத்தன்துறை, நீரோடி காலனி ஆகிய மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைத்திடவும், மீனவ கிராமங்களை இணைக்கும் தேங்காய்ப்பட்டணம், இரயுமன்துறை இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட அகலமான பாலம் அமைக்க ஆய்வு செய்து, நிதியொதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி ஹெலன் காலனியில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா என்பதுதான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேரவையில் 72 கிலோ மீட்டர் நீளமுள்ள

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 42 கிராமங்களுக்கும் சேர்ந்து இங்கே அவருடைய கருத்துகளை வெளியிடுகின்றார்கள். நான் இந்த நேரத்தில் உங்களிடம் தெரிவிப்பது என்னவென்றால், உங்கள் தலைமையோடு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஐந்தாண்டுக்கால ஆட்சியிலே மீனவ கிராமங்களுக்கு மீன் இறங்குதளம், மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு 332 கோடியே 80 இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக, மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 2011-2012, 2012-2013, 2013-2014, 2014-2015 ஆம் ஆண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 1,796 கோடியே 18 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) அளவிற்கு இன்றைக்கு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் குறிப்பிட்ட தூத்தூர் துறைமுகம் தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் சட்டமன்றத்தில் அவருடைய குளச்சல் தொகுதிக்கு துறைமுகம் அமைக்க வேண்டும் என்று அடிக்கடி கேட்டார். அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஏற்கெனவே, 37 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடந்தன. ஆனால், மக்களுடைய உணர்வுகளையும், உள்ளங்களையும் புரிந்து கொண்டு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு, மீண்டும் மறு மதிப்பீடு தயார் செய்து, கூடுதல் நிதியாக 87 கோடியே 75 இலட்சம் ரூபாய் வழங்கிய பெருமை மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் சொல்கின்ற ஹெலன் கிராமம் என்பது சிறிய கிராமம். 52 வல்லங்கள் மற்றும் நான்கு கண்ணாடிப் படகுகள் கொண்டிருக்கின்ற கிராமம் ஆகும். அருகில் இரயுமன்துறையிலே 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மீன் இறங்குதளம் அமைக்க பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, தயக்கமில்லாமல் பணிகள் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டி முறைகளைப் பூர்த்தி செய்ய, கால அவகாசம் தேவைப்படுகின்றது. ஆக, மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளம்

அமைப்பதற்கு தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றி ஏற்கெனவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் ஹெலன் காலனியில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு தகுதியான இடம் கண்டறியப்பட்டால், எதிர்காலத்தில் வல்லங்கள் மற்றும் நாட்டுப் படகுகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப, மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறுகள் இருப்பின், நிதி ஒதுக்கீடு செய்து, ஹெலன் காலனியில் மீன் இறங்குதளம் அமைக்க வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் என்று கூறியமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடற்கரையிலிருந்து 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களின் பாதுகாப்பு கருதி, தமிழக அரசு மானிய விலையில் தொலைத் தொடர்புக் கருவிகளை மீனவர்களுக்கு வழங்கும் என சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. தேங்காய்ப்பட்டணத்திலிருந்து அரையன்தோப்பு, முள்ளூர்துறை, இராமன்துறை வழியாகச் செல்லும் சாலை இரவிபுத்தன்துறைக்கும், வள்ளவிளைக்கும் இடையே உள்ள சாலை கடல் அரிப்பினால் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேள்வியைக் கேட்கிறீர்கள். தனிக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியைக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) தனிக் கேள்வியாகப் போடவும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம்

படித்தவர். மீன் இறங்குதளம் சம்பந்தமாகத்தான் மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்க வேண்டும். சாலைகளைப் பற்றிக் கேட்டால், என்னிடம் பதில் இல்லை. ஆகவே, சாலைகளைப் பற்றி மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இல்லாத அளவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னமுட்டம், முட்டம், இராஜாக்கமங்கலம்துறை, மணக்குடி, குளச்சல், தேங்காய்ப்பட்டணம், இனையம்புத்தன்துறை, சைமன் காலனி, குறும்பனை, தூத்தூர், இரயுமன்துறை ஆகிய பகுதிகளில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

இந்த ஆண்டு உங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் ஏறத்தாழ 210 கோடியே 81 இலட்சம் ரூபாய் வழங்கிய பெருமை மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஹெலன் காலனி என்பது மிகச் சிறிய கிராமம். அங்கே தடுப்புச் சுவர் **(RMS wall)** உள்ளது. அவற்றின் சிறிய இடைவெளியில்தான் அங்கே வல்லங்கள், கட்டுமரங்கள்மூலம் மீன்பிடித் தொழில் நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மீனவ மக்களுக்கு பொற்கால ஆட்சி என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சியைப் போல இல்லை. நீங்கள் தாங்கிக் கொண்டிருந்த கடந்த கால ஆட்சியைப் போல் இல்லாமல், உங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் 210 கோடியே 81 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படும் அரசு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. ஆக, தேவை ஏற்படின், ஹெலன் காலனி பகுதியிலே எதிர்காலத்திலே மீன் இறங்குதளம் அமைப்பதற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.